6. அறிவிப்பு

உறுப்பினர்கள் திரு. உ. பலராமன் மற்றும் திரு. என். பன்னீர்செல்வம் கைது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை மாநகர காவல்துறை ஆணையாளரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

`` I have the honour to inform you that Thiru U. Balaraman, M.L.A. of Park Town Constituency was arrested along with others today (28-12-1995) at 9.45 hrs. near Moor Market Sub-way, Madras in G-2. Periamet Police Station, Crime No. 1781/95 under Section 143 IPC and 41 C.P. Act when they assembled there in violation of the regulatory orders in force with an intention to resort to Rail Picketing agitation at Madras Central Railway Station."

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

``Thiru Pannerselvam, M.L.A. of Thiruvidaimarudur Assembly Constitutency, Thanjavur District was arrested on 28-12-1995 at 11-30 hrs. under Section 151 Cr.P.C. While leading a procession to picket in Kumbakonam Railway Station."

இந்த இரண்டு செய்திகளும் வரப்பெற்றுள்ளன. எனக்கு வந்த செய்தியை உங்களுக்கு சொல்கிறேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

பிற்பகல் 2-15

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(இ) நகராட்சியைச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவு, 1995)—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தினுடைய ஆணிவேர்களாக திகழ்ந்துக் கொண்டிருக்கிற இந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு, தமிழகத்தினுடைய ஈடு இணையற்ற முதல்வர், தாம் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற உடனேயே, தேர்தலை அறிவித்தார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். இடையிலே மத்தியிலே அரசமைப்புச் சட்டத்திலே மாற்றம் ஏற்பட்ட காரணத்தாலும், தனி பஞ்சாயத்து ராஜ் சட்டம்